# ஜனவரி



# 1. ஆசீர்வாதத்தின் பாதை

# 1. ஆசீர்வாதத்தின் பாதை

## முன்னுரை

புத்தாண்டு வாழ்த்துகளைக்கூட இன்னும் எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை. கிறிஸ்து பிறப்பு விழாவின் மகிழ்ச்சிகூட இன்னும் மங்காத நிலையில் ஒரு சிலுவைப் பாதை தேவையா என நம்மில் பலர் எண்ணக்கூடும். அதற்குக் காரணம் சிலுவைப்பாதையை பாவப் பொறுத்தலுக்கான ஒரு பரிகார பக்தி முயற்சியாகவே பார்க்கப் பழகிவிட்டோம். ஆனால், அதையும் தாண்டி சிலுவைப் பாதை என்பது நமக்கு ஆசி வழங்கும் பாதை, பதினான்கு தலங்கள் வழியாக, நமது நல்வாழ்விற்கான பல பாடங்களை இயேசு நம்மில் பதிய வைக்கும் பாதை என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் செய்யவிருக்கும் இந்தச் சிலுவைப் பாதையை இயேசுவின் புத்தாண்டுச் செய்தியாக எடுத்துக்கொள்வோம். ஒரு புதிய ஆண்டை எப்படி எதிர்கொண்டால் அது ஆசீர்வாதமாய் அமையும் என அவரே கற்பிப்பதாய்க் கருதி நடைபயில்வோம் வாருங்கள். இறைவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!

## ✦ முதல் நிலை

## இறைத் திருவுளத்தை ஏற்போம்

புலர்ந்துள்ள புத்தாண்டு எப்படி இருக்கப் போகிறது? பூப்பாதையில் பயணிப்போமா? அல்லது முட்புதர்களை எதிர்கொள்வோமா? என்கிற பதைபதைப்பு நம்மில் இருக்கத்தான் செய்கிறது. உற்சாகமும் உத்வேகமும் நம்மை உந்தித் தள்ளினாலும் உள்மனதில் ஏதோ ஒரு நெருடல்.

இந்த ஆண்டாவது எல்லாம் நன்றாக அமையுமா? நலமோடு நகருமா? என்கிற ஐயம் ஆட்டிப் படைக்கிறது.

திருச்சிலுவைப் பாதையின் முதல்நிலை நமக்கொரு பாடத்தைக் கற்பிக்கிறது. தவறான தீர்ப்போடு தொடங்கிய பயணமே இன்றளவும் மீட்பின் பாதையாய் கொண்டாடப்படுகிறது. அநியாயத் தீர்ப்பை ஆரம்பமாகக் கொண்ட ஒரு பாதை தான் இன்றுவரை புனிதப் பாதையாகப் போற்றப்படுகிறது. அதற்குக் காரணம் அந்தப் பாதையில் பயணித்த இயேசுதான். பிலாத்துவின் அநியாயத் தீர்ப்பைக் கூட அவர் மனிதச் செயலாய்ப் பார்க்கவில்லை. மேலிருந்து அருளப்பட்ட அதிகாரத்தால் நிகழ்ந்த ஒன்றாகவே அவர் பார்த்தார். தந்தையின் திருவுளத்தால் நிகழுகிற அனைத்தும் நலமானவையே என நம்பினார். அவை நன்மையாகவே முடியும் என்று உறுதியாய் நம்பினார். நம்பிக்கையோடு பயணித்தார்.

நாமும்கூட இந்த ஆண்டு நிகழப்போகும் அனைத்தையும் எதேச்சையான செயல்கள் என்றோ, இயல்பான நிகழ்வுகள் என்றோ கருதிக் கடக்காமல், அவை ஒவ்வொன்றிலும், இறைத்திருவுளத்தைக் காண்போம். அப்போது நம் பயணத்துக்கு அர்த்தம் கிடைக்கும். பயணத்தின் முடிவு வெற்றியாகவே அமையும். ஆண்டவர் தாமே நமக்குச் சொல்லுகிறார்: “உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ! அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே.” (எரே. 29: 11)

## செபம்

இறைவா! புலர்ந்துள்ள புத்தாண்டிற்காய் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இவ்வாண்டில் நிகழவிருக்கும் அனைத்தையும் உமக்கே அர்ப்பணிக்கின்றோம். அவற்றில் இறைத் திருவுளத்தை காணுகிற அருள் தந்து எம்மை ஆசீர்வதியும்.

# சுமைகளை இனிதாக்குவோம்

ஆண்டு முழுவதும் செய்ய வேண்டிய காரியங்கள் நம்மை மலைக்கச் செய்யலாம். குழந்தைகளுக்கான படிப்புச் செலவு, கரை சேர்க்க வேண்டிய பிள்ளைகளைப் பற்றிய கவலை, தீர்க்க வேண்டிய கடன்சுமை என வரிசை கட்டி நிற்கும் கடமைகள் நமக்கு அச்சத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தலாம்.

ஆண்டவர் இயேசுவின் பாடுகள் நமக்கு ஓர் உண்மையை உரக்கச் சொல்கின்றன. பாரமான சிலுவையைப் பார்த்ததும் இயேசுவின் உள்ளம்கூட பதைபதைத்துத்தான் போயிருக்கும். இது சாத்தியமா? என்றுகூட சந்தேகம் தலை தூக்கியிருக்கும். உள்ளம் எவ்வளவு ஊக்கம் உள்ளதாயினும் உடல் வலுவற்றது தானே! ஆனால் இயேசு சிலுவையைத் துணிவுடன் அரவணைக்கிறார். அதற்குக் காரணம் சிலுவையின் பாரத்தைவிட இயேசுவின் அன்பு வேட்கை வலிமை மிக்கதாய் இருந்தது. தாம் அந்தச் சிலுவையை சுமக்கவில்லையென்றால் மானுட மீட்பு சாத்தியமில்லாமல் போய்விடும் என்பதனால் இயேசு சிலுவையை சுமக்கத் துணிகிறார்.

சுமைகளை யாராலும் தவிர்க்க முடியாது. ஆனால் அவற்றைச் சுகமான சுமைகளாக மாற்ற நம்மால் முடியும். அப்போது அவை இலகுவாக மாறுவதை நம்மால் உணர முடியும். இயேசு மானுடத்தின் மீது கொண்ட அன்பின் காரணமாக சிலுவையை ஏற்றார். அதனால் சிலுவை அவருக்கு ஒரு சாதனமாக மாறியது. நாமும் நம் கண்முன் அணிவகுத்து நிற்கும் கடமைச் சுமைகளைத் தாண்டி, யாருக்காக அவற்றை நாம் ஏற்கிறோம் என்பதை எண்ணிப் பார்ப்போம். அவர்கள் மீது அளப்பரிய அன்பு கொள்வோம். அந்த அன்பும், அவர்களுக்காகவே இந்தச் சுமையைச் சுமக்கிறோம் என்கின்ற தெளிவும் நம் சுமைகளைச் சுகமாக்கும். சாத்தியமேயில்லை எனத் தோன்றுவதும் சாத்தியமாகும். இயேசு தாமே

கூறியுள்ளார்: “என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள்... என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாயுள்ளது.” (மத்.11:29,30)

### செபம்

இறைவா! நீர் தந்துள்ள உறவுகளுக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். கடமைகளின் கடினத்தைப் பாராமல், அவற்றை யாருக்காக சுமக்கிறோமோ, அவர்கள் மீது அதிக கனிவு காட்டுகிற அருள் தந்து எம்மை ஆசீர்வதியும்.

### ✦ மூன்றாம் நிலை

## நல்லதே நடக்கும் என நம்புவோம்

“ஆண்டின் தொடக்கமே சரியில்லையே! எடுத்த எடுப்பிலேயே சறுக்கி விட்டதே!” என நம்மில் சிலர் சோர்ந்து போயிருக்கலாம். இன்னும் சிலர் இந்த ஆண்டு நன்றாக இருக்கப் போவதில்லை என்கிற முன்முடிவோடுகூட இருக்கலாம். “கிரகங்களின் பார்வை சரியில்லை; உங்களுக்கு இது கெட்ட நேரம்; இத்தகைய தோஷங்களுக்கு பரிகாரம்கூட கிடையாதே” என்றெல்லாம் கூறி சில சோதிடர்கள் நம்மில் சிலரை அச்சுறுத்தியிருக்கலாம். இதனால் எதைச் செய்யவும் மனமில்லாமல், எதைத் தொடங்கவும் துணிவில்லாமல், இந்த ஆண்டின் முதல் மாதம் கடப்பதற்கு முன்பாகவே ஆண்டு முழுவதையும் தொலைத்துவிட்ட சிலரும் நம்மில் இருக்கலாம்.

இந்த மூன்றாம் தலம் நமக்கு ஒரு உத்வேகத்தை அளிக்கிறது. அகிலத்தையும் படைத்த ஆண்டவரின் மகனுக்கே அடி சறுக்கியது என்பதுதான் இந்தத் தலம் உணர்த்தும் உண்மை. எப்போது மானுட உருவை இயேசு பூண்டாரோ அப்போதே அவருக்கும் இடறல்கள், சறுக்கல்கள், தடுமாற்றங்கள் போன்றவற்றிலிருந்து விதிவிலக்கு இல்லாமல் போய்விட்டது. முதல் கோணல் முற்றும் கோணல் எனச் சொல்லி இயேசு முடங்கிப் போயிருந்தால், இன்றுவரை மானுடம் வீழ்ந்த கதையைத் தான் பேசியிருப்போம். இயேசுவால் அது மீண்ட சரிதையைப் பேசியிருக்க முடியாது.

தனது முதல் பாடல் பதிவின் போதே மின்தடை ஏற்பட்டதை கெட்ட சகுனமாகவும், மோசமான தொடக்கமாகவும் கருதி முடங்கிப் போயிருந்தால், இந்த உலகம் ஒரு இசைஞானியை அடையாளம் கண்டிருக்கவே முடியாது. சகுனம் என்பதும், சறுக்கல் என்பதும் சாதனையாளர்களுக்குப் பொருளற்ற சொற்கள். எனவே, பயணத்தைத் தொடர்வோம். இயேசுவைப் போல், "இந்த ஆண்டின் இனிவரும் நாட்கள் எல்லாம் நன்றாகவே அமையும்" என்கிற நம்பிக்கையோடு தொடர்ந்து பயணிப்போம். ஆண்டவர் தாமே சொல்லுகிறார்: "இன்று முதல் உங்களுக்கு நான் ஆசி வழங்குவேன்." (ஆகா. 2:19)

**செபம்**

இறைவா! நீர் தருகிற ஒவ்வொரு வாய்ப்பிற்கும் உமக்கு நன்றி கூறுகிறோம். தொடங்குவது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமானது தொடர்வது என்பதை உணர்ந்து தளர்வின்றி பயணிக்கும் அருள் தந்து எம்மை ஆசீர்வதியும்.

✦ **நான்காம் நிலை**

# தாயின் கரம் பற்றி நடப்போம்

"இவர் முகத்தில் முழித்தால்தான் இந்த ஆண்டு முழுவதும் நன்றாக அமையும்; இவர் காலில் விழுந்து ஆசி பெற்றால்தான் இந்த ஆண்டு சிறப்பாக இருக்கும்" எனப் பார்த்துப் பார்த்து ஆண்டினைத் தொடங்கியிருப்போம். அதே நேரத்தில் தப்பித் தவறிக்கூட சிலர் முகத்தில் பட்டுவிடக் கூடாது என்பதற்காக படாதபாடு பட்டிருப்போம். காரணம் நாம் நன்றாக வாழ்வதைப் பார்க்க சிலருக்கு பொறுக்காது; பொறாமையால் வெந்து போவார்கள். அதே நபர்கள் நாம் சற்று சரிந்து போயிருப்பதைக் காணநேரிட்டால் மனம் குளிர்ந்து போவார்கள். பற்றாக்குறைக்கு அதைப் பற்றி பார்ப்போரிடமெல்லாம் சொல்லி பெருமகிழ்ச்சி அடைவார்கள். ஆனால் ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது: யார் முகத்தில் விழித்தாலும், விழிக்காவிட்டாலும் நம் வாழ்க்கையை வாழ வேண்டியது

நாம்தான். நாம் மட்டுமேதான். இதில் நல்லோரின் ஆசியும் துணையும் இருந்தால் அது நிச்சயமாக ஒரு பலம் என்பதில் சந்தேகமில்லை.

சிலுவை சுமந்த இயேசுவுக்கு இந்தப் பாக்கியம் வாய்த்தது. தான் படும் பாடுகளைத் தன் தாய் பார்த்து பரிதவிக்கக் கூடாது என உள்ளத்தின் ஒரு மூலையில் நிச்சயமாய் அவர் நினைத்திருப்பார். ஆனால் அந்தத் தாயின் பார்வை பட்டதுமே அவர் புதுத்தெம்பு பெற்றிருப்பார். சாதாரணத் தாயாக மரியா இருந்திருந்தால் அங்கே ஒரு களேபரமே நடந்திருக்கும். ஒப்பாரியும், கூப்பாடும், ஓலமும், சாபமும் அந்தச் சந்திப்பையே சங்கடமாக மற்றியிருக்கும். ஆனால் மரியாவோ தெய்வத்தாய். தம் மகனின் மீட்புப் பணியை அவர் செய்திட உடனிருந்தார்; துணை நின்றார்; கூடவே பயணித்தார். புத்தாண்டின் முதல் நாளில் இறைவனின் தாயாம் மரியாவின் கரம் பற்றித்தான் நாம் நம் பயணத்தைத் தொடங்கினோம். இறைவனின் தாயாம் மரியா நமக்கும் தாயாக இருப்பது எத்துணைப் பெரும் பேறு. ‘அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்’’ (யோவா. 2:5) என்கிற மரியாவின் குரல் கேட்போம். இயேசுவோடு பயணிப்போம் இந்த ஆண்டு முழுவதும்.

**செபம்**

இறைவா! உமது தாயை எமக்கும் தாயாகத் தந்தமைக்கு உமக்கு நன்றி கூறுகிறோம். அந்தத் தாயின் கரம் பற்றியவர்களாய் இயேசு சொல்வதையெல்லாம் செய்கின்ற அருள் தந்து எங்களை ஆசீர்வதியும்.

### ✦ ஐந்தாம் நிலை

## எதிர்பாரா உதவிகள் காத்திருக்கின்றன

அனுப்பியுள்ள மனுவிற்கு இந்த ஆண்டாவது அனுகூலமான அனுமதி கிடைக்குமா? செய்திருக்கிற விண்ணப்பத்திற்கு இந்த ஆண்டாவது சாதகமான பதில் வருமா? கேட்டிருந்த

உதவி இந்த ஆண்டாவது கிடைத்திடுமா? தட்டியிருந்த கதவு இந்த ஆண்டாவது திறக்குமா? தேடியிருந்த சிபாரிசை இந்த ஆண்டாவது பெற்றிடுவோமா? வேலை வாய்ப்பும், விரும்புகிற வாழ்வும் இந்த ஆண்டாவது அமைந்திடுமா? - இப்படி ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளோடு இந்த ஆண்டினைத் தொடங்கியுள்ளோம்.

இந்தத் தலத்தில் ஒரு வித்தியாசமான பாடத்தை இயேசு நமக்குக் கற்றுத் தருகிறார். சிலுவைப் பாதை யின்போது தமக்கு ஆதரவான குரலும், உதவுகின்ற கரமும் எங்கிருந்தெல்லாம் வரும் என்று இயேசு எதிர்பார்த்தாரோ, அங்கிருந்தெல்லாம் அவை வரவில்லை. அவரால் நலமடைந்து அவருக்குக் கடமைப்பட்டவர்கள் யாரும் அவருக்கு உதவ முன்வரவில்லை. வழிப்போக்கனான சீரேன் ஊரானாகிய சீமோனின் உதவிதான் இயேசுவுக்குக் கிடைத்தது. மகிழ்வோடு அதனை ஏற்றுக்கொண்ட இயேசு மனமாற சீமோனை வாழ்த்தியிருப்பார்.

நமக்கு உதவக் கடமைப்பட்டவர்கள் என நாம் எண்ணிக் கொண்டிருக்கிற உறவினர்களும், நண்பர்களும் நம்மை சில நேரங்களில் ஏமாற்றிவிடலாம். ஆனால் கடவுள் ஒரு போதும் ஏமாற்றுவதில்லை. நினையாத நேரத்தில், நினையாத விதத்தில், நினையாத மனிதர்கள் வழியாக உதவிக்கரம் நீட்டுவார். இந்த ஆண்டும் அந்த அதிசயம் நிச்சயம் நிகழும் என நம்புவோம். ஏனெனில் ஆண்டவர் தாமே கூறியுள்ளார்: "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில், கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர்; தேடுவோர் கண்டடைகின்றனர்; தட்டுவோர்க்குத் திறக்கப்படும்." (மத். 7:7)

**செபம்**

இறைவா! எங்கள் ஏமாற்றங்களைக்கூட ஏற்றமிகு மாற்றங்களாக மாற்றுகிற உமக்கு நன்றி கூறுகிறோம். எனக்கு உதவி உம்மிடமிருந்து வரும் என்கிற உறுதியோடு பயணிக்கிற அருள் தந்து எங்களை ஆசீர்வதியும்.

✦ ஆறாம் நிலை

# முகம் மலரட்டும்; அகம் மிளிரட்டும்

"கொட்டிக் கொடுக்க வேண்டாம்; சற்றுத் தட்டிக் கொடுக்கலாமே?" என சிலரைப் பார்த்து நாம் நினைத்திருப்போம். "என்னத்தப் பெருசா எதிர்பார்த்தோம்? ஒரு அனுசரணையான பார்வை, ஒரு ஆதரவான குரல், ஒரு உற்சாகமான வார்த்தை, ஒரு நம்பிக்கை தரும் உடனிருப்பு - அதைக்கூடச் செய்யவில்லையே!" என நாம் அங்கலாய்க்கும் நேரங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த ஆண்டாவது நம் முகத்தில் நம்பிக்கைச் சுடர் ஏற்ற யாராவது வருவார்களா, ஊக்கமளித்து உயர்த்திவிடக் கூடிய நல்ல உள்ளம் படைத்தவர்களை சந்திக்க மாட்டோமா? என எண்ணுகிற நமக்கு இந்தத்தலம் நம்பிக்கை ஊட்டுகிறது.

வீரப்பெண் வெரோனிக்காவின் பார்வை மட்டுமல்ல, தீரமிகு செயலும் இயேசுவுக்கு பெரும்பலம் ஊட்டின. இந்த ஆண்டு அப்படிப்பட்ட ஆச்சரியங்கள் நம் வாழ்விலும் நடக்க வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம். "தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்.... இதை நீங்கள் காண்பீர்கள், உங்கள் இதயம் மகிழ்ச்சி கொள்ளும்" (எசா. 66: 13, 14) என்பதே இறைவனின் வாக்குறுதி.

வெரோனிக்காவின் உதவியை இயேசு வெட்கமின்றி ஏற்றதோடு அவருக்கு விலை மதிப்பில்லா வெகுமதியையும் அருளுகின்றார். தம் திருமுகத்தை அவளது துகிலில் பதிக்கின்றார். கனிவான பார்வையோடும் கருத்தான செயல்களோடும் சிலர் நம்மை அணுகுகின்றபோது "எனக்கு கழிவிரக்கம் தேவையில்லை," என முறுக்கிக் கொண்டு நிற்கும் மூர்க்கத்தனத்தைத் துறந்து, இரக்கம் காட்டுவதும், இரக்கம் பெறுவதும் தான் உயிரினங்களின் உயரிய பண்பு என்பதை உணர்ந்து வாழப் பழகுவோம். அப்படி வாழ்ந்தால் இந்த ஆண்டு நம் முகம் மட்டுமல்ல, பிறரது முகமும் மலரும், மிளிரும்.

**செபம்**

இறைவா! இரங்குகிற இதயம் படைத்தவர்களை எங்களுக்குத் தந்தமைக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். கனிவான செயல்களை களிப்போடு ஏற்பதுபோல் உவப்போடு செய்யவும் அருள் தந்து எங்களை ஆசீர்வதியும்.

✦ **ஏழாம் நிலை**

# உறுதியான சபதம் ஏற்போம்

“ஆண்டுதோறும் பிரதிக்கனை எடுக்கத்தான் செய்கிறேன். ஆனால் கடைபிடிக்கத்தான் முடிவதில்லை” என அங்கலாய்ப்பவர்கள் தான் நாம் எல்லோரும். “இந்தப் பாழாப்போன குடிப்பழக்கத்தையும், புகைபிடித்தலையும் விட்டுறத்தான் பாக்கிறேன். ஊகூம். முடிஞ்ச பாடில்லையே” என எத்தனையோ தீயப் பழக்கங்கள் குறித்தக் கவலையோடுதான் சிலர் இந்த ஆண்டைத் தொடங்கியிருக்கக் கூடும். நம் எல்லோருக்கும் இயேசு பாடுபட்ட இந்தத்தலம் சோர்விலிருந்து விடுதலை தருகிறது.

இயேசு முதல் முறை விழுந்ததற்கும், இரண்டாம் முறை விழுந்ததற்கும் இடையில் குறைந்தது மூன்று நிகழ்வுகள் நடந்ததாக அறிகிறோம்: மரியாவின் பார்வை, சீமோனின் உதவி, வெரோனிக்காவின் ஆறுதல். ஆனால், அவை அனைத்தையும் மீறி இயேசு மீண்டும் விழுகிறார். காரணம் அவர் சுமந்து சென்ற சிலுவை உடலை மட்டுமல்ல, மனதையும் மிகவே நலிவடையச் செய்திருந்தது.

மீண்டும் மீண்டும் நாம் செய்கிற தவறுகளும், மீள முடியாமல் தவிக்கிற பழக்கவழக்கங்களும் நம் உள்ளத்தின் திடத்தை உலுக்கி விடுவதோடு, உடலையும் ஒத்துழைக்க அனுமதிக்காது. எழுந்து நடக்க ஆசையும் ஆர்வமும் மட்டும் இருந்தால் போதாது. உறுதியான முன்னெடுப்புகளும் அவசியம். மனித உதவிகள் வலுவளிக்காத நேரத்தில் இயேசு

தம் தந்தையை நோக்கியவராய், அவர் தந்த உற்சாகத்தில் மீண்டும் எழுந்து தம் பயணத்தைத் தொடர்கிறார். அறிவுரைகள், ஆலோசனைகள், ஆற்றுப்படுத்துதல்கள், ஏன் மருத்துவ சிகிச்சைகள்கூட பலனளிக்காமல் போகும்போது “என் அருள் உனக்குப் போதும்; வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்” (2.கொரி 12:9) என்றுரைக்கும் இறைவனின் துணை கொண்டு உறுதியோடு எழ முயல்வோம். எழுவோம் என்கிற உறுதியான சபதம் ஏற்போம். இந்த ஆண்டு நாம் சரிந்தவர்களாய் இருக்கப்போவதில்லை; சாதித்தவர்களாய் மாறப் போகிறோம்

**செபம்**

இறைவா! எப்போதும் எங்களைத் தூக்கிவிட நீர் தயாராயிருப்பதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். தொடர் முயற்சி வெற்றி தரும் என்கிற நம்பிக்கையோடு எங்கள் தீய பழக்கங்களுக்கு எதிராக போராட அருள் தந்து எங்களை ஆசீர்வதியும்.

### ✦ எட்டாம் நிலை:

## கண்ணீருக்கு வலிமை சேர்ப்போம்

இந்த ஆண்டாவது கண்ணீரில்லாமல், கவலையில்லாமல், கஷ்டமில்லாமல் நகர்ந்து செல்லாதா? என்கிற ஏக்கத்தோடு தான் ஒவ்வோர் ஆண்டையும் தொடங்குகிறோம். ஆனால் ஏதோ ஒரு விதத்தில் நாம் கண்ணீர் விடும் சூழ்நிலைகள் வந்து விடுகின்றன. கண்ணில் சிறு துரும்பு விழுவதாலும் கண்ணீர் வரலாம்; நெஞ்சையே உலுக்கும் துயர் நிகழ்வுகளாலும் கண்ணீர் வரலாம். ஆனால் நாம் வடிக்கின்ற கண்ணீர் நம்மில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதுதான் முக்கியம்.

கண்ணீரைக் கூடப் புனிதப்படுத்தும் சூத்திரத்தை இயேசு இந்தத் தலத்தில் நமக்குக் கற்பிக்கிறார். குழந்தையைப் பெற்றெடுக்கையில் வலிதாங்காமல் கதறும் தாயின் கண்ணீர்

விரைவிலேயே களிநடனமாக மாறிவிடுகிறது. வியர்வையும் கண்ணீரும் சிந்தாமல் வெற்றியின் படிகளில் ஏறுவது கடினம். எனவேதான் விவிலியம் கூறுகிறது, "கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்." (தி.பா. 126:5)

நல்ல காரணங்களுக்காக சிந்தப்படும் கண்ணீருக்கு வலிமை அதிகம். அதைவிட ஆற்றல் மிகுந்தது பிறருக்காக நாம் சிந்தும் கண்ணீர். அதைத்தான் இயேசு கற்பிக்கிறார் இத்தலத்தில். தம் கண்ணீரைப் புறந்தள்ளிவிட்டு பிறர் கண்ணீருக்கான காரணத்தையும், அதற்கான நிவாரணத்தையும் கற்பிக்கிறார். பிறந்துள்ள இந்தப் புதிய ஆண்டில் யாருடைய கண்ணீரையாவது நாம் துடைக்க முயன்றால் நம் கண்ணீர் தானாகவே உலர்ந்துவிடும்.

**செபம்**

இறைவா! உங்கள் துக்கம் மகிழ்ச்சியாய் மாறும் என்று நீர் தருகிற வாக்குறுதிக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். பிறருக்கு இரங்குவதன் மூலம் எங்கள் கண்ணீருக்கு வலிமை சேர்க்கும் அருள் தந்து எங்களை ஆசீர்வதியும்.

✦ **ஒன்பதாம் நிலை:**

## முயற்சியில் நிலைத்தால் மகுடம் நிச்சயம்

ஆயிரம் கனவுகளோடு ஒவ்வொரு ஆண்டையும் தொடங்குகிற நாம், அந்தந்த ஆண்டின் முடிவிலே சறுக்கியவர்களாகவே உணர்கிறோம். இந்த ஆண்டாவது சறுக்கல்கள் இல்லாத வாழ்வும், உயர்வும் வாய்த்துவிடாதா என ஏங்குகிறோம். ஒரு அடி எடுத்து வைத்தால் எட்டு அடி சறுக்குகிறதே; அடி மேல் அடி விழுந்தால், தோல்விக்கு அடுத்து தோல்வியே கிடைத்தால் துவண்டு போவதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும் எனக் கேட்கும் நமக்கு, மூன்றாம் முறை விழுந்து

கிடக்கும் இயேசு வார்த்தைகளே இல்லாமல் ஒரு போதனை செய்கிறார்.

வெறும் மூன்று முறைதான் இயேசு விழுந்தாரா? அல்லது மேலும் பலமுறை விழுந்தாரா? என்பது அவருக்குத் தான் வெளிச்சம். ஆனால் விழுந்த அத்தனை முறையும் எழுந்தார் என்பதுதான் அவர் நமக்குத் தரும் வெளிச்சம். விழுந்துகிடந்த ஊதாரி மைந்தன் பன்றிகள் உண்ணும் நெற்றினை உண்ணும் நிலைவந்தபோது தான் உணர்வு பெற்றான். உடனே சொன்னான் "எழுந்து தன் தந்தையிடம் செல்வேன்" என்று. சொன்னவன் அதைச்செய்தும் காட்டினான். அதன் விளைவு - தொலைவில் இருந்தபோதே அவனது தந்தை எதிர்கொண்டு சென்று, வாஞ்சையோடு வரவேற்று, புத்தாடையும் மோதிரமும் அணிவித்து உயர்ந்த நிலைக்கு அவனை உயர்த்தினார். விழுந்து கிடப்பதில் சுகம் காணாமல், எழுந்து நடக்க முற்படும்போது தான் வெற்றி தேவதை நம்மையும் விரிந்த கரம் கொண்டு வரவேற்று மகுடம் சூட்டுவாள் என்பதில் ஐயமில்லை. நம் ஆண்டவரும் அதைத்தான் உறுதிபடச் சொல்கிறார். "இறுதிவரை மனஉறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர்." (மத். 24 : 13). இந்தப் புதிய ஆண்டில் நம்பிக்கையைக் கைவிடாமல் முயற்சி செய்வோம். யாருக்குத் தெரியும்? இந்த ஆண்டேகூட நமக்கு மகுடம் கிடைக்கலாம்.

**செபம்**

இறைவா! எங்கள் வெற்றிக்காக நீர் அகன்ற விழிகளோடு காத்திருப்பதற்காக நன்றி கூறுகிறோம். நாங்கள் சோர்ந்து போகாது முயற்சியில் நிலைக்கும் அருள் தந்து எங்களை ஆசீர்வதியும்.

✦ **பத்தாம் நிலை**

# அவமானங்கள் நிரந்தரமல்ல

கடந்த ஆண்டுகளில் எல்லாம் அவமானத்தையே சந்தித்துவிட்ட எனக்கு இந்த ஆண்டாவது மகிமையின் ஆண்டாக அமைய

வேண்டும். யார் முன்பும் நான் தலைகுனிய நேரிடாமல், எப்போதும் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான வெற்றிகளும், காரியங்களும் கைகூட வேண்டும் என்று ஆசைப்படும் நம் அனைவருக்கும் இந்தத் தலம் சற்று அதிர்ச்சியைத் தரலாம். இயேசுவே அவமானப்படுத்தப்பட்டவராய், ஆடைகள் களையப்பட்டவராய், அலங்கோலமாய் நிற்கின்றார்.

ஆனால் ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்கு எது உச்சக்கட்ட அவமானமாக இருக்க முடியுமோ, அந்த ஒரு நிகழ்வினைத்தான் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகள் கடந்த பின்பும் நாம் நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறோம்.

பிறரால் நமக்கு ஏற்படுகிற அவமானங்கள் நிரந்தரமானவை அல்ல. பல நேரங்களில் அவர்களே வெட்கித் தலைகுனிகிற அளவுக்கு நாம் அசுர வளர்ச்சி அடைந்திட முடியும். தாங்கள் புகைவண்டி நிலையத்தில் கீழே தள்ளி அவமானப்படுத்திய மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை, தென் ஆப்ரிக்கர்கள் உட்பட அத்துணை பேரும் “மகாத்மா” எனக் கொண்டாடுகின்றனர். அந்த அரை நிர்வாணிதான் அகிலம் போற்றும் அஹிம்சாவாதியாய் உயர்ந்து நிற்கின்றார். இதுதான் வரலாறு. இடையில் ஏற்படும் அவமானங்கள் எல்லாம் வெறும் இடையூறு.

ஒன்று மட்டும் தான் முக்கியம். வெட்கத்துக்குரிய செயல்களையும், அவமானத்துக்குரிய காரியங்களையும் நாம் செய்துவிட்டு, அதற்குப்பின் அஞ்சி அஞ்சி வாழ்கிறோமா? என்பது தான் கேள்வி. அப்படி இல்லாத பட்சத்தில் நாம் என்றும் தலை நிமிர்ந்தவர்களாகவே வாழலாம். விவிலியம் சொல்லுகிறது “அவரை நோக்கிப் பார்ப்போர் மகிழ்ச்சியால் மிளிர்வர்; அவர்கள் முகம் அவமானத்திற்கு உள்ளாவதில்லை.” (தி.பா. 34:5)

**செபம்**

இறைவா! எங்களை விலையேறப் பெற்றவர்களாய் நீர் கருதுவதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம்.

பிறரால் நாங்கள் அவமானப்படுத்தப்பட்டாலும், நாங்கள் அவமானத்துக்குரிய செயல்களை செய்யாதிருக்கும் அருள் தந்து எங்களை ஆசீர்வதியும்.

## ✦ பதினொன்றாம் நிலை:

# சிலுவைகளை சிறகுகளாக்குவோம்

“போடுகிற திட்டங்கள் எல்லாம் தகர்க்கப்படுகின்றனவே! ஒவ்வொரு வாசலும் அடைக்கப்படுகிறதே! ஒவ்வொரு முயற்சியும் முடக்கப்படுகிறதே! இந்த ஆண்டாவது எதையாவது சாதித்துவிட வேண்டும்” எனத் துடிக்கும் நமக்கு இந்தப் பதினோராம் நிலை பேரிடியாகவே தோன்றலாம். அகிலத்தைப் படைத்தக் கடவுளின் மகனே சிலுவையில் அறையப்படுகிறார். “போதும் உன் புதிய சித்தாந்தங்கள் எல்லாம். முடங்கிப்போ சிலுவையிலேயே” என மூன்றே ஆணிகளால் முக்காலத்திற்கும் உரியவரை பிணைத்து வைத்தார்கள். ஆனால் முடிந்ததா? இன்று வரை ஆணி கொண்ட அந்தக் காயங்களைத்தான் அன்புடன் முத்தி செய்கின்றோம்.

செய்த குற்றத்திற்காக ஒருவர் அனுபவிக்கும் வேதனையைத் தண்டனை என்கின்றோம். செய்யாத தவற்றிற்காக ஒருவர் துன்புறும்போது அதை அநியாயம் என்கின்றோம். ஆனால் பிறருக்காகவும், பிறரது நலனுக்காகவும், நல்வாழ்விற்காகவும் ஒருவர் அனுபவிக்கும் துன்பமும், துயரமும், தண்டனையும்கூட தியாகம் என்றே நினைவுகூறப்பட்டு கொண்டாடப்படும். அப்படிப்பட்ட தியாகங்கள் பலனின்றிப் போகாது.

நம்முடைய கவனக்குறைவோ, தவறோ, கடமைத் தவறலோ, கயமையோ காரணமாக இல்லாமல், நம் பாதையில் ஏற்படும் தடங்கல்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். சிலுவையிலே அறையப்பட்ட ஆண்டவர் உயர்த்தப்பட்டது போல முடக்கப்படுகின்ற நம் முயற்சிகள் எழும். வெற்றி விருட்சமாய் உயர்ந்து நிற்கும். தூய பேதுரு தம் திருமடலில் கூறுவது

போல, “நன்மை செய்தும், அதற்காகப் பொறுமையோடு துன்புற்றால், அது கடவுளுக்கு உகந்ததாகும்.” (1. பேதுரு. 2:20) அது மாபெரும் ஆசியாகவும் மாறும். இந்த ஆண்டு அத்தகைய இறையாசி நிறை ஆண்டாக அமையட்டும்.

**செபம்**

இறைவா! எங்களுக்காக நீர் சிலுவையில் அறையுண்டதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். உம்மைப்போலவே சிலுவையைக் கண்டு அஞ்சாமல், அதனையே சிறகாய் உயர்த்தி சிகரம் அடைகின்ற அருளைத் தந்து எங்களை ஆசீர்வதியும்.

✦ **பன்னிரண்டாம் நிலை:**

# அர்ப்பண உணர்வோடு கடமையாற்றுவோம்

ஒவ்வொரு ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் கடந்து சென்றுவிடுமோ! என் வாழ்வுக்கு ஒரு விடிவு காலமே பிறக்காதா? இந்த ஆண்டிலாவது என் ஆசைகளில் சிலவேனும் நிறைவேறாதா என்கிற ஏக்கத்தோடு காத்திருக்கும் நமக்கு இயேசுவின் சிலுவை மரணம் ஒரு நிலையான பாடத்தை கற்பிக்கிறது. சிலுவையிலிருந்து இயேசு உதிர்த்த ஒரு வாக்கியம் நம்மை சிந்திக்க அழைக்கிறது: “எல்லாம் நிறைவேறிற்று.” (யோவா. 19:30)

“எல்லாம் க்ளோஸ், எல்லாம் முடிஞ்சு போச்சு” என்று சொல்வதற்கும் ‘எல்லாம் நிறைவேறிற்று’ என்று சொல்வதற்கும் நிறையவே வித்தியாசம் இருக்கிறது. கடனே என்று நம் பணிகளைச் செய்வதும், அவற்றைச் செய்த பின் மிஞ்சுகிற அலுப்பும் சலிப்பும், வாழும் காலத்திலேயே நம்மைச் செத்தவர்கள் ஆக்கிவிடும். அர்ப்பணமும் மன நிறைவும் இருக்குமாயின் வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் கிடைக்கும்;

வியர்வை கூட மணக்கும்; இரத்தம் கூட இனிக்கும். அதனால்தான் ‘சாவு’கூட இயேசுவுக்கு சாதனையாக மாறியது.

‘எல்லாம் நிறைவேறிற்று’ என அவரால் நிம்மதி பெருமூச்சு விட முடிந்தது. ஆனால் அது ஒரு நாள் வித்தையல்ல. திருத்தூதர் நூலில் சொல்லப்படுகிறது. “கடவுள் அவரோடு இருந்ததால்... எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்.” (தி.ப. 10:38) அன்றன்றைய உணவை ஆண்டவரிடம் கேட்கும் நாம் அன்றன்றைய கடமைகளையும் பணிகளையும் அர்ப்பண உணர்வோடும், உற்சாகத்தோடும், தினசரி இறைவேண்டலுடன் இன்முகத்துடன் செய்து முடிக்கப் பழகுவோம். இரவு உறங்கச் செல்லுகையில், “இன்றைக்கு எனக்கு அருளப்பட்ட ‘எல்லாம் நிறைவேறிற்று’; அனைத்தையும் நிறைவாகவே செய்துவிட்டேன்” என நம்மால் சொல்ல முடிகிறதா என்று பார்ப்போம். அப்படிச் சொல்ல முடிந்ததென்றால் இந்த ஆண்டின் நிறைவு மட்டுமல்ல, நம் வாழ்வின் நிறைவும்கூட வெற்றியாகவே நமக்கு அமையும்.

**செபம்**

இறைவா ! அன்றாட உணவையும் அன்றாடக் கடமைகளோடு சேர்த்துக் கொடுப்பதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். எங்கள் அன்றாடப் பணிகளை அன்றன்றைக்கே அகமகிழ்வுடனும், அர்ப்பண உணர்வுடனும், செவ்வனே செய்து முடிக்கும் அருள் தந்து எங்களை ஆசீர்வதியும்.

✦ **பதின்மூன்றாம் நிலை:**

# உடனிருப்பதில் பலம் காண்போம்

என் குழந்தைகள் ஆசையாய்க் கேட்பதை இந்த ஆண்டாவது செய்து முடிக்க முடியுமா? என் வயது முதிர்ந்த பெற்றோரின் அத்தியாவசியத் தேவைகளை இந்த ஆண்டாவது குறைவின்றி நிறைவேற்ற முடியுமா? என ஆசைப்படுகிறோம். ஒவ்வொரு வருடமும் எனக்கு ஏற்படுகிற ஏமாற்றங்கள் எனக்கு வலிப்பதைவிட என்னைச் சார்ந்தவர்களுக்கு என்னால் ஏற்படும் ஏமாற்றங்கள் எனக்கு இன்னும் அதிகமாய் வலிக்கின்றன. இந்த ஆண்டாவது அப்படி ஒன்றும் நடந்து விடக்கூடாது.

நம்மைச் சார்ந்தவர்களுக்கு நம்மால் மகிழ்ச்சியும் மனநிறைவும் உண்டாக வேண்டும் என்று ஆசைப்படுகிற நமக்கு அன்னை மரியாவும் ஆண்டவர் இயேசுவும் ஒரு முக்கியமானப் பாடத்தை இந்தத் தலத்தில் கற்பிக்கின்றார்கள். இந்தச் சிலுவைப் பயணத்தின்போது தாய் மரியா செய்ததெல்லாம் ஒன்றே ஒன்று தான்; உடனிருந்தார். சிலுவை சுமக்கத் தோள் கொடுத்ததாகவோ, துணிகளால் முகத்தைத் துடைத்ததாகவோ ஆறுதல் மொழி பேசியதாகவோ பதிவுகள் இல்லை. ஆனால் இயேசுவின் பாடுகளில் மரியா முழுமையாகப் பங்குபெற்றார் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்தே இருக்க முடியாது.

பல நேரங்களில் நம் வயது முதிர்ந்த பெற்றோர்களுக்கு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும், நம் குழந்தைகள் ஆசைப்படுவதையெல்லாம் வாங்கிக் கொடுத்துவிட வேண்டும், வசதிவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும், கைநிறைய பணம் இருக்கும்படி சம்பாதித்துத் தள்ள வேண்டும் என்கிற எண்ணத்தில் அவர்களோடு நேரம் செலவழிப்பதையே மறந்துவிடுகிறோம். நாம் உடன் இருக்கிறோம் என்கிற உணர்வினைவிட மேலான பரிசு ஒன்று இருக்க முடியாது என்பதை உணர்வோம். “தேவையானது ஒன்றே; மரியா நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்” (லூக் 10:42) என மார்த்தாவுக்கு இயேசு சொன்ன அறிவுரைதான் நமக்கும் இந்தத் தலத்தில் சொல்லப்படுகிறது. இருப்பதைக் கொண்டு மகிழக் கற்றுக்கொண்டால் உடன் இருப்பது ஒன்றும் இயலாத காரியமில்லை. ஒவ்வொரு நாளும், ஒரு குறிப்பிட்ட, குறைந்தபட்ச நேரத்தையாவது நம் குழந்தைகளோடும், குடும்பத்தாரோடும் செலவழிப்போம் என்கிற உறுதிமொழியை இந்த ஆண்டு ஏற்போம். ஆண்டு முழுவதும் ஆனந்தம் தழைப்பதை நிச்சயமாய்ப் பார்ப்போம்.

**செபம்**

இறைவா! நீர் எந்நாளும் எங்களோடு இருப்பதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். பெரும்பொருள் ஈட்டிக்

கொடுக்கிற மகிழ்ச்சியைவிட இன்பத்திலும், துன்பத்திலும் உடனிருப்பதே பேரானந்தம் என்று உணர்ந்திடும் அருள் தந்து எங்களை ஆசீர்வதியும்.

✦ **பதினான்காம் நிலை**

# நன்றியுணர்வோடு மகிழ்ந்திருக்கப் பழகுவோம்

“இந்த ஆண்டாவது கடன் வாங்காமல் காலத்தைக் கடத்திவிட வேண்டும். கடன் கொடுத்தவருக்கு ஒளிந்து வாழுகிற வாழ்க்கை இந்த ஆண்டாவது இல்லாமல் போக வேண்டும்” என ஏங்குவோர் நம்மில் பலர். அதேநேரம் “கடன் வாங்கியாவது களிப்போடு வாழ வேண்டும். என்ன பெரிய கடன்? என்றைக்காவது ஒரு நாள் யோகம் அடித்தால் எல்லாம் தீர்ந்துவிடும்” என அச்சமே இல்லாமல் கடன் வாங்குவதையே தங்கள் வாடிக்கையாகக் கொண்டு கூத்தடிப்பவர்களும் நம்மில் சிலர் உண்டு.

இரவல் கல்லறையில் உறங்குகிற இயேசு தருகிற செய்தி “நீங்களும் இரவல் பெற்று வாழுங்கள்” என்பதல்ல. மாறாக, எல்லார்க்கும் எல்லாமும் வாய்த்திடுவது கிடையாது; வாய்த்திடவும் முடியாது. இறை மகனாம் இயேசுவுக்குக் கூட பிறப்பதற்கு மாட்டுக் கொட்டகையும், அடக்கத்திற்கு இரவல் கல்லறையும் தான் கிடைத்தன. ஆனால் அனைத்தையும் அமைந்த உள்ளத்தோடு சேசு, மரி, சூசை என்கிற திருக்குடும்பம் ஏற்றுக்கொண்டதோடு, அருள் வாழ்வில் நிலைத்திடவும் செய்தனர்.

பல நேரங்களில் “தன்னிறைவு - Self Sufficiency" என்ற பதத்தைப் பயன்படுத்தி, தேவையான எல்லாவற்றையும் பெற்றிருப்பதே நல்வாழ்வு என்கின்ற சித்தாந்தத்தில் வாழ்கிறோம். அப்படிப்பட்ட தன்னிறைவான வாழ்வையே விரும்புகிறோம். ஆனால் நாம் விரும்ப வேண்டியது ‘தன்னிறைவு’ அல்ல ‘மனநிறைவு’. வானத்துப் பறவைகளுக்கும்,